அதன் மேல் பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. பலத்த மழை வந்தால் மணல் மூட்டைகள் அடித்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, மிக விரைவிலே இந்தப் பாலத்தைப் புதுப்பித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அது தாம்போகி பாலமாக இருந்த காரணத்தினாலேதான் வெள்ளக்காலங்களில் அடித்துச் செல்லப் பட்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆகவேதான் அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு அங்கே உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று துறையினுடைய அதிகாரிகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, இனி அமைக்கப்படுகின்ற பாலம் உயர்மட்டப் பாலமாகத்தான் இருக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறது. ஆகவே, தாம்போகி பாலம் அமைத்தால் வெள்ளம் வருகின்றபோது மறுபடியும் அடித்துச் செல்லப்பட்டு விடும். எனவே, நிதியும் வீணாகி விடும். வெகுவிரைவிலே நிதி ஆதாரங்களைச் சரி செய்து, உயர்மட்டப் பாலம் கட்டப்படும். அப்படி ஏதாவது மழைக் காலங்களில் ஏற்கெனவே இருக்கின்ற தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதை அடித்துச் செல்லப்படுமானால், உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டு போக்குவரத்தைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும், எந்தவிதத்திலும் போக்குவரத்து பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

9—

பாகலூர் மற்றும் சூளகிரியில் வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டுதல்.

23195*—திரு. கே.ஏ. மனோகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 4]

(அ) பாகலூர், சூளகிரி போன்ற இடங்களில் அரசு வீட்டு வசதி வாரியம் மூலமாக வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த நிதியாண்டு அரசு இதனை செயல்படுத்தும்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பாகலூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் திட்டம் மூலமாக வீடுகள் கட்டும் திட்டத்திற்கான நிலம் தனியாரிடமிருந்து வாங்குவதற்கு பேச்சு வார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சூளகிரியில் மேற்படி திட்டத்திற்கு போதிய வரவேற்பு இல்லாததால் இத்திட்டத்தை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூளகிரியில் அதற்கான விண்ணப்பங்கள் நிறைய வரவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான காலக்கெடுவை கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் எக்ஸிகியூடிவ் இன்ஜினியரை கேட்டிருந்தேன். ஆகவே அதற்கான காலக்கெடுவை கூட்டிக் கொடுத்தால் நிறைய விண்ணப்பங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, பாகலூரிலே தனியாரிடத்தை ஆர்ஜிதம் செய்வதாகச் சொன்னார்கள், அது இந்த ஆண்டிலேயே முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர வீட்டுவசதி திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டத்தில் 83 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில் பாகலூர், சூளகிரி நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வீட்டுவசதிக்கானத் தேவை நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி பாகலூரில் வீட்டுவசதிக்காக போதிய மனுக்கள் பெறப்பட்டன. ஆனால் சூளகிரியில் வீடுகளுக்கும், மனைகளுக்கும் போதிய வரவேற்பு இல்லாத காரணத்தினால் 13 பேர்கள் வீடுகளுக்கும் மனைகளுக்கு, 13 பேர்கள் மட்டுமே அங்கே மனு செய்த காரணத்தினாலே இத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் முறைப்படி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட பின்னருமே அங்கே போதிய மனுக்கள் வராத காரணத்தினால் சூளகிரி

பகுதியிலே இத்திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அதைப்போல பாகலூர் பகுதியைப் பொறுத்தவரை தனியாருடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது நீதிமன்றத்திற்குச் சென்று பிற்காலங்களிலே அதிக விலை நிர்ணயம் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் தற்போது பேச்சுவார்த்தை மூலம் நிலங்கள் தேர்வு செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே தெலுங்கு பேசக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய அரசு விளம்பரங்கள் சூளகிரி பகுதியிலே சென்றடைவதில்லை. ஆகவே, இந்தக் காலக்கெடுவை நீட்டித்துக் கொடுத்தால் நிறைய விண்ணப்பங்கள் வர வாய்ப்பிருக்கிறது என்பதைச் சொல்லி, மீண்டும் அந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க அரசு விரும்புகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 100 மனுக்களை பெற்றுத் தருவார்களேயானால், இது குறித்து அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

10—

கீழப்பாவூர், ஆலங்குளம் பகுதியில் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதனக் கூடம் அமைத்தல்.

***35894**—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர், ஆலங்குளம் பகுதியில் விளையும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதனக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஆலங்குளம் பகுதிகளில் காய்கறிகளை பாதுகாக்க குளிர் சாதனக் கூடம் (Cold Storage) அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.